# ஓசூர் மாநகராட்சி

மாமன்ற கூட்ட அறிக்கை

**2021**ஆம் ஆண்டு மே **மாதம் 10**ம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் **03.00** மணிக்கு **அவசரக் கூட்டம்** மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள தனி அலுவலர் அறையில் நடைபெறும். எனவே இரண்டாம் நிலை அலுவலர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தனி அலுவலர்
ஓசூர் மாநகராட்சி

================================================================================

## மாமன்றப்பொருள்

**பொருள் எண் 1**

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் கடித எண் Lr.No.TUFIDCO/Nirbhaya Fund/915/AM(B)/2019 நாள்.**26.04.2021**ல் நிர்பயா நிதியின் கீழ் அம்ரூத் நகரங்களில் மின்விளக்கு வெளிச்சம் இல்லாத இருண்ட இடங்களில் (Lighting of Dark Spots) மின்விளக்குகள் அமைக்க ரூ.**20.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும், இதற்கான இடங்களை தேர்வு செய்து முன்மொழிவுகள் அனுப்பவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, ஓசூர் சார் ஆட்சியர், ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் கூட்டம் நடத்தி கலந்தாய்வு செய்து பெண்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு இம்மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் இடங்களில் மின்விளக்குகள் அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | இடம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 3 | இராஜீவ் காந்தி நகர், பேடரப்பள்ளி | 12 |
| 2 | 5 | 1) பேளாப்பா நகர் | 10 |
| | | 2) கருமாரியம்மன் லேஅவுட் | 10 |
| | | 3) இயற்கை நகர் | 10 |
| | | 4) செந்தமிழ் நகர் | 10 |
| | | 5) நாகம்மா நகர் | 10 |
| | | 6) ஆனந்த் நகர் விரிவாக்கம் | 12 |
| 3 | 6 | எல்காட் நகர் | 18 |
| 4 | 7 | 1) பிஸ்மில்லா நகர் | 18 |
| | | 2) ஸ்டார் என்க்லேவ் | 8 |
| | | 3) அலசநத்தம் சாலை அன்னை நகர் சந்திப்பு சாலை உட்பகுதி | 15 |
| 5 | 8 | இந்திரா காந்தி நகர் | 20 |
| 6 | 11 | பாகலூர் மெயின் ரோடு | 19 |
| 7 | 12 | தென்றல் நகர் | 6 |
| 8 | 13 | முனிஸ்வர் நகர் விரிவாக்கம் (தைலந்தோப்பு அருகில்) | 10 |
| 9 | 14 | அமிர்தா நகர் | 2 |
| 10 | 15 | 1) இராஜாஜி நகர் | 15 |
| | | 2) அமிர்தா நகர் ரோடு (காலேஜ் ரோடு) | 8 |
| | | 3) தோப்பம்மா கோவில் பின்புறம் (எம்.எம் நகர்) | 6 |

| | | | |
|---|---|---|---|
| 11 | 16 | அதியமான் சாலை (மூக்கண்டப்பள்ளி) | 1 |
| 12 | 17 | மத்தம் முதல் MM நகர் | 3 |
| 13 | 18 | 1) ஜெய்சக்தி நகர் | 5 |
| | | 2) 100 அடி சாலை சந்திப்பு முதல் மகாலட்சுமி நகர் ஒயின்ஷாப் | 10 |
| 14 | 25 | 1) SLV நகர் | 10 |
| | | 2) திருவள்ளுவர் நகர் விரிவாக்கம் | 10 |
| | | 3) கேம்பிரிட்ஜ் பள்ளி அருகில் | 4 |
| 15 | 26 | 1) சானசந்திரம் வன அலுவலகம் | 3 |
| | | 2) காயத்திரி கோவில் எதிரில் | 10 |
| | | 3) கசவகட்டா | 3 |
| 16 | 27 | 1) மாருதி நகர், நட்சத்திரா ஹோம்ஸ் | 10 |
| | | 2) வக்கீல் லேஅவுட் | 8 |
| 17 | 32 | 1) தளி மெயின் ரோடு | 2 |
| | | 2) அவ்வை நகர் | 3 |
| 18 | 33 | சத்யா சாய் நகர் | 15 |
| 19 | 38 | 1) ஜனக்புரி லேஅவுட் | 15 |
| | | 2) இரயில் நிலையம் பின்புறம் | 10 |
| | | 3) குமரன் நகர் சாலை முடிவு | 10 |
| | | 4) பாரதிதாசன் நகர் முதல் வள்ளுவர் நகர் சந்திப்பு | 10 |
| | | 5) கோகுல் நகர் | 10 |
| | | 6) கயிலை நகர் முதல் கோகுல் நகர் வரை | 10 |
| 20 | 39 | நேரு நகர் சாலை முடிவு | 15 |
| 21 | 40 | பாரத் நகர் | 4 |
| 22 | 42 | 1) கர்னூர் | 5 |
| | | 2) அந்திவாடி கூட்ரோடு, கர்னூர் பேருந்து நிலையம் | 10 |
| 23 | 43 | 1) மத்திகிரி கூட்ரோடு, அந்திவாடி கூட்ரோடு | 32 |
| | | 2) பொதிகை நகர் | 9 |
| | | 3) விகாஸ் நகர் | 8 |
| 24 | 45 | 1) VIP நகர் | 5 |
| | | 2) தீபம் நகர் | 3 |
| மொத்தம் | | | 472 |

மேற்கண்ட இருண்ட இடங்களில் மின்விளக்குகள் அமைக்கவும், மேற்படி பகுதிகளில் மின்விளக்குகள் அமைக்க ஆகும் செலவீனத்தை நிர்பயா நிதியில் மேற்கொள்ளவும், முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் TUFIDCO, சென்னை அவர்களுக்கு அனுப்பவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை நிர்பயா நிதியின் கீழ் மேற்கொள்ளவும், கூடுதல் செலவீனம் ஏதேனும் ஏற்படின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 2**

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2021, கொரோனா தொற்றுக் காரணமாக வாக்குச் சாவடி மையங்களுக்கு வரும் மூத்த குடிமக்கள் மற்றும் உடல் ஊனமுற்ற வாக்காளர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, இம்மாநகராட்சி பகுதிகளின் வாக்குச் சாவடி மையங்களுக்கு 25 Wheel Chair கொள்முதல் செய்ய மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்களின் நேரடி அறிவுரை நாள் 20.03.2021ன் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட Wheel Chair கொள்முதல் செய்ய துலிப் பார்மா, ஈ.வி.கே. சம்பத் சாலை, ஈரோடு என்பவரிடமிருந்து 25 எண்ணிக்கையிலான Folding Wheel Chair (Height 20 inch, Width 18 inch) வாங்கவும் அதன் விலை ரூ.162500/– + 5 சதவீதம் GST (ரூ.8125) ஆக மொத்தம் ரூ.170625/–க்கும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 15ன் கீழ் மேற்படி செலவினத்தை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால், மேற்படி கொள்முதல் தேர்தல் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும், மேற்படி கொள்முதல் செய்யப்பட்டதற்கு உரிய தொகையினை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1302/2021/எச்1

**பொருள் எண் 3**

இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவிலுள்ள TN70 H3240 எண்ணிட்ட ஈப்பு வாகனத்தில் இருந்த டயர்கள் மிகவும் பழுதடைந்து விட்டதாகவும், மேற்படி பழுதடைந்த டயர்களை மாற்றி புதியதாக 5 டயர்கள், வாங்கி வழங்குமாறு சம்மந்தப்பட்ட ஓட்டுனர் மனுவின் மூலம் கோரியதின்பேரில், மேற்படி ஈப்பு வாகனத்திற்கு புதிய 5 டயர்கள், வாங்கி பொருத்தி கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.35,250/–க்கும், மன்றத்தின் அனுமதி பெறவும், அவசர அவசியம் கருதி, நேரடியாக விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் உரிமையாளர், ஸ்ரீ பாக்கியலட்சுமி டயர்ஸ், பெங்களூர் பை பாஸ் ரோடு, ஒசூர் என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை மாமன்றத்தின் முன் அனுமதி பெறவும் வேண்டியும், ஒரு வரைவு மன்றப்பொருள் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் விலாசம் | 4 டயர்கள், டியுப்களின் விலை |
|---|---|---|
| 1 | உரிமையாளர்,<br>ஸ்ரீ பாக்கியலட்சுமி ,<br>பெங்களூர் பை பாஸ் ரோடு, ஒசூர் | ரூ.35,250/– |
| 2 | உரிமையாளர்,<br>சிவாஸ் வீல்கேர்,<br>பாகலூர் ரோடு, ஒசூர் | ரூ.36,500/– |
| 3 | உரிமையாளர்,<br>எஸ்.கே.எஸ் ஆட்டோ மொபைல்ஸ், ஒசூர் | ரூ.40,114/– |

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் உரிமையாளர், ஸ்ரீ பாக்கியலட்சுமி, பெங்களூர் பை பாஸ் ரோடு, ஒசூர்என்பவர் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

( ந.க.எண்.01826/2021/எச்1)

பொருள் எண் 4

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2021, கொரோனா தொற்றுக் காரணமாக வாக்குச் சாவடி மையங்களுக்கு வரும் வாக்காளர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, இம்மாநகராட்சி பகுதிகளின் வாக்குச் சாவடி மையங்களுக்கு 222 Dustbin கொள்முதல் செய்ய மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்களின் கடிதம் ந.க.எண் A7/27929/2020 நாள் 12.03.2021ன் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட Dustbin கொள்முதல் செய்ய மூன்று விலைப்புள்ளிகளும் அனுப்பப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்க்காணுமாறு

| வ. எண் | பொருட்களின் விவரம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|
| | | பிரியா டிரேடர்ஸ், கிருஷ்ணகிரி ஒன்றின் விலை (ரூ.) | அகத்தியன் எண்டர்பிரைசஸ், கிருஷ்ணகிரி ஒன்றின் விலை (ரூ.) | நாகராஜ் பிளாஸ்டிக் மற்றும் கெமிக்கல்ஸ், கிருஷ்ணகிரி ஒன்றின் விலை (ரூ.) |
| 1 | Dust Bin 70 Ltrs. (With Swing) | 820 | 865 | 920 |
| 2 | Dust Bin 70 Ltrs. (68 cm Height, Top width 46 cm) Bottom width 48 cm & without swing) | 620 | 710 | 870 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் மெஸர்ஸ் பிரியா டிரேடர்ஸ், கிருஷ்ணகிரி என்பவரின் விலைப்புள்ளி மற்ற இரு விலைப்புள்ளிகளைக் காட்டிலும் குறைவாக உள்ளதால், 331 எண்ணிக்கையிலான Dust Bin 70 Ltrs. (With Swing) வாங்கவும் அதன் விலை ரூ.271420/– + 12 சதவீதம் GST (ரூ.32570) ஆக மொத்தம் ரூ.303990/–க்கும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 15ன் கீழ் மேற்படி செலவினத்தை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால், மேற்படி கொள்முதல் தேர்தல் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும், மேற்படி கொள்முதல் செய்யப்பட்டதற்கு உரிய தொகையினை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1302/2021/எச்1

பொருள் எண் 5

மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் ந.க.எண் 3745/2021/அ7 நாள் 23.02.2021ம் தேதிய செயல்முறை ஆணையில், எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021ல், இந்திய தேர்தல் ஆணையம் கொரோனா தொற்று காரணமாக மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 பிரிவு 60சியில் சில திருத்தங்களை கொண்டு வந்துள்ளது என்றும், அதன்படி கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள வாக்காளர்களில் 80 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் கொரோனா தொற்றினால் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் ஆகியோர்கள் கோவிட் – 2019 தொற்றை தவிர்க்கும் பொருட்டு மேற்படி வாக்காளர்களிடம் உரிய அலுவலர்கள் கொண்டு விருப்புரிமை கேட்டுப் பெற்று அஞ்சல் வாக்குகள் அனுப்பி மீள சம்மந்தப்பட்ட களப் பணியாளர்கள் மூலம் அஞ்சல் வாக்குகள் பதிவு செய்து மூடிய முத்திரை தபாலில் பெறுதல் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையத்தால் விரிவான வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்ட ஒசூர் சட்டமன்றத் தொகுதியில் 80 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் வாக்காளர்களின் எண்ணிக்கை 5073மற்றும் மாற்றுத் திறனாளி வாக்காளர்களின் எண்ணிக்கை 2126 ஆக மொத்தம் 7199 வாக்காளர்கள் உள்ளதாகவும் மேற்படி வாக்காளர்கள் மற்றும் கொரோனா தொற்றினால் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் ஆகியோர்களிடமிருந்து வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் விருப்பத்தின் அடிப்படையில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் அறிவிப்பு ஆணை வெளி வந்த ஐந்து தினங்களுக்குள் படிவம் 12–டி–ஐ பெற்று மேற்படி வாக்காளர்கள் அஞ்சல் வாக்குகள் செலுத்த அனுமதிக்கலாம் என இந்திய தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் மேற்கண்ட பணிகளை சுமூகமாக எவ்வித தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர், ஒசூர் மாநகராட்சி அவர்களை தனி அலுவலராக நியமித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே 80 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் கொரோனா தொற்றினால் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் ஆகியோர்கள் கோவிட் – 2019 தொற்றை தவிர்க்கும் பொருட்டு மேற்படி வாக்காளர்களிடம் உரிய அலுவலர்கள் கொண்டு விருப்புரிமை கேட்டுப் பெற்று அஞ்சல் வாக்குகள் அனுப்பி மீள சம்மந்தப்பட்ட களப் பணியாளர்கள் மூலம் அஞ்சல் வாக்குகள் பதிவு செய்து மூடிய முத்திரை தபாலில் பெறுதல் தொடர்பாக பணிகளை அவசர அவசியம் கருதியும், தேர்தலை கருத்தில் கொண்டும், கீழ் விவரிக்கப்பட்டபடி வாங்கி உபயோகப்படுத்தப்பட்டதன் விவரங்கள்

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விவரம் | எண்ணிக்கை | ஒன்றின் விலை (ரூ.) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | Raising Edge Computer System, Hosur | Wi-fi Dongle | 2 | 450.00 | 900.00 |
| 2 | Raising Edge Computer System, Hosur | Wi-fi Dongle | 2 | 450.00 | 900.00 |
| | | Printer Service Charges | 1 | 200.00 | 200.00 |
| 3 | Raising Edge Computer System, Hosur | Toner Powder | 1 | 350.00 | 350.00 |
| 4 | Minerva Graphics, Hosur | Rubber Stamp | 2 | 200.00 | 400.00 |
| 5 | Srinidhi Xerox | Printout | | | 100.00 |
| 6 | Digital Polymers, Hosur | Polymer Stamps | 4 | 200.00 | 800.00 |
| 7 | Srinidhi Xerox | Printout & Spiral Binding | 9 Set | - | 14700.00 |
| 8 | Sri Vignesh Paper Stores | 2” Colour Tape | 4 | 35.00 | 140.00 |
| | | 2” Brown Tape | 1 | 60.00 | 60.00 |
| | | Pen | 1 | 10.00 | 10.00 |
| | | Brown Sheet | 100 | 4.50 | 450.00 |
| 9 | Ganesh Super Shoppe | Brown Sheet | 17 | 15.00 | 255.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | Srinidhi Xerox | Printout & Spiral Binding | 5 Set | - | 11640.00 |
| 11 | Digital Polymers, Hosur | Polymer Stamp | 17 | | 1550.00 |
| 12 | New Abraa's Stationery | Stamp Pad Ink | 1 | 48.00 | 48.00 |
| | | Stamp Pad | 1 | 35.00 | 35.00 |
| | | Stamp Pad Ink – Red | 2 | 20.00 | 40.00 |
| 13 | Sri Balaji Sarees & Readymades | Kora Cloth | 10 mtr. | 80.00 | 800.00 |
| 14 | Srinidhi Xerox | Spiral Binding | 2 set | | 550.00 |
| 15 | Sri Vignesh Paper Store | Stapler | 20 | 50.00 | 1000.00 |
| | | K.Pin | 2 Box | 170.00 | 340.00 |
| | | Stamp Pad | 20 | 38.00 | 760.00 |
| | | F/S Cloth Cover | 100 | 5.00 | 500.00 |
| 16 | Maharani Shopping | Trunk Box | 5 | 880.00 | 4400.00 |
| 17 | Sri Vignesh Paper Store | Att.Register | 20 | 22.00 | 440.00 |
| | | Cutter | 24 | 5.00 | 120.00 |
| | | Steel Scale | 20 | 22.00 | 440.00 |
| | | Ball Pen | 20 | 10.00 | 200.00 |
| | | Pencil | 5 Box | 45.00 | 225.00 |
| | | Sharpner | 10 | 5.00 | 50.00 |
| 18 | Sri Vignesh Paper Store | Brown Sheet<br>Cutting Charges | 250 | 4.50 | 1125.00<br>75.00 |
| 19 | Sri Vignesh Paper Store | Fevistik | 20 | 40.00 | 800.00 |
| 20 | Galaxy VIP Bag House | Soni Bag | 20 | 350.00 | 7000.00 |
| 21 | Devi Prints | Xerox Printout | 340 | 1.00 | 340.00 |
| 22 | Sri Nagneswari Textiles | Gada Cloth | 2 Mtr | 50.00 | 100.00 |
| 23 | Maharani VIP Shopping | Trunk Box | 2 | 880.00 | 1760.00 |
| 24 | Ganesh Papers | Sealing Wax | 1 | 40.00 | 40.00 |
| 25 | Ramani Shankar Agencies, | Diesel | 53.94 Ltrs. | 87.13 | 4691.00 |
| 26 | Gayathri Fuels | Diesel | 50 Ltrs. | 87.85 | 4392.50 |
| 27 | Sri Vignesh Paper Store | Brown Sheet + Cutting | 100 | 15.00 | 1500.00 |
| | | Pen | 50 | 10.00 | 500.00 |
| | | Fevistick | 10 | 25.00 | 250.00 |
| | | Tag (10 x 1) | 1 Bud | 200.00 | 200.00 |
| | | Eraser | 4 | 5.00 | 20.00 |
| | | Pencil | 1 set | 45.00 | 45.00 |
| | | Sketch | 1 set | 30.00 | 30.00 |
| 28 | Iyarkai Super Market | Rules Note | 2 | 40.00 | 80.00 |
| | | Pen | 2 | 5.00 | 10.00 |
| 29 | Raising Edge Computer System, Hosur | 88A Toner Powder | 1 | 350.00 | 350.00 |
| 30 | Raising Edge Computer System, Hosur | 88A Toner Powder | 1 | 350.00 | 350.00 |
| | | 88A Toner Powder<br>12A Toner Powder | 1<br>1 | 350.00<br>350.00 | 350.00<br>350.00 |
| | | **T o t a l** | | | **66761.00** |

மேற்கண்ட அவசர தேர்தல் செலவினம் மேற்கொண்டதை சம்மந்தப்பட்டவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. தேர்தல் அவசரம் என்பதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட செலவினம் மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 0753/2020/சி2

**பொருள் எண் 6**

ஒசூர் மாநகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 3.00 இலட்சமாக உள்ளது. கொரோன வைரசின் இரண்டாம் அலையின் காரணமாக தமிழ்நாட்டில் நாளொன்றுக்கு 30,000க்கு மேல் நோய் தொற்றாளர்களின் எண்ணிக்கை பதிவாகி வருகிறது. ஒசூர் நகரில் மட்டும் சுமார் 190 நபர்களுக்கு மேல் நோய் தொற்று ஏற்பட்டு பாதிப்படைந்து வருகின்றனர். எனவே, மேலும் நோய்த் தொற்று பரவாமல் தடுக்கவும், ஒசூர் மாநகராட்சியிலுள்ள பொதுமக்களை பாதுகாக்கவும், நகரின் 45 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இதற்காக தமிழ்நாடு அரசு நிறுவனமான “Tamcol”, சென்னை நிறுவனத்தில் பேசியதில் 500gm பெட்டி (Box) ஒன்றின் விலை ரூ.369.00 (GST இல்லாமல்) என தெரிவித்தனர். அதனடிப்படையில், இம்மாநகராட்சிக்கு 500Kg கபசுர குடிநீர் சூரணம் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காகும் செலவினம் ரூ.3,87,500/– கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 500gm பெட்டி – 1000 எண்ணிக்கை × 369/1No | = | 3,69,000.00 |
| CGST 2.50% | = | 9,225.00 |
| SGST 2.50% | = | 9,225.00 |
| மொத்தம் | = | **3,87,450.00** |

எனவே மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை கொரோனா நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 7

ஒசூர் நகராட்சியில் கணினி வரி வசூல் மையங்களில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் இரசீதுகள் இரத்து செய்து கையாடல் செய்தது கண்டறியப்பட்டு விசாரணையை நிலுவையில் வைத்து திரு.மா.ஜெயக்குமார், வருவாய் உதவியாளர் மற்றும் திரு.சி.அனிக்குட்டி, பதிவறை எழுத்தர் ஆகியோரை முறையே 03.03.2017, 02.05.2017 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்து 3.3.2017 மற்றும் 2.5.2017 ஆகிய தேதிகளின் செயல்முறைகளில் உத்தரவிடப்பட்டது. மேற்படி கையாடல் செய்தது தொடர்பாக த.நா.நகராட்சி பணியாளர் பணிவிதிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 8(2)ன்கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 9.6.2017ம் தேதிய குற்றச்சாட்டு குறிப்பாணைகளில் உத்தரவிடப்பட்டது. இக்குற்றச்சாட்டுகள் மீதான 30.5.2018ம் தேதிய விசாரணை அலுவலரின் அறிக்கையில் குற்றச்சாட்டுகள் ஊர்ஜிதமாகியுள்ளது என அறிக்கை செய்துள்ளார். மேற்படி திரு.எம்.ஜெயகுமார், வருவாய் உதவியாளர் மற்றும் திரு.சி.அனிக்குட்டி, பதிவறை எழுத்தர் ஆகியோர் மீதான இவ்வொழுங்கு நடவடிக்கையில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், தற்காப்பு முகாந்திரம் மற்றும் விசாரணை அலுவலரின் அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டதில் அனைத்து குற்றச்சாட்டுகளும் நிருபணம் செய்யப்பட்டுள்ளது. இந்நேர்வில் கையாடல் செய்யப்பட்ட தொகை முழுவதும் நகராட்சி கணக்கில் வரவாகியுள்ளது. எனவே நிருபணம் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக திரு.எம்.ஜெயகுமார், வருவாய் உதவியாளர் மற்றும் திரு.சி.அனிக்குட்டி, பதிவறை எழுத்தர் ஆகியோருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை முறையே 01.04.2020 முதல் அடுத்த இரண்டு ஆண்டுகள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தி வைத்தும், தற்காலிக பணிநீக்க காலத்தினை ஊதியமில்லாத விடுப்பாக பாவித்தும், அன்னார் மீது காவல் துறையில் அளிக்கப்பட்ட இவ்வலுவலக புகார் மீது காவல் துறையால் எடுக்கப்படும் இறுதி நடவடிக்கைக்கு உட்படுத்தி அன்னார்களை 01.04.2020 முதல் பணியில் சேர அனுமதித்தும், 31.3.2020 மற்றும் 2.11.2020 ஆகிய தேதிகளின் செயல்முறைகளில் உத்தரவிடப்பட்டது. அதன்பேரில், மேற்படி இரண்டு பணியாளர்களும் 01.04.2020 முதல் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் மேற்படி குற்றம் சாட்டப்பட்ட மூன்றாம் நபரான திரு.ஆர்.நரேஷ்குமார், துப்புரவு பணியாளர் 05.01.2021ம் தேதிய மனுவின் மூலம் தன்னை பணியமர்த்துமாறு கோரியுள்ளார்.

எனவே மேற்படி கையாடல் செய்ததில் தொடர்புடைய மூன்று பணியாளர்களில் இரண்டு பணியாளர்கள் மட்டும் 01.04.2020 முதல் பணிபுரிந்து வரும் நிலையில் திரு.ஆர்.நரேஷ்குமார், துப்புரவு பணியாளருக்கு தண்டனை வழஙகி பணியில் சேர்த்து கொள்வது குறித்த சட்ட கருத்து (LEGAL OPINION) வழஙகுமாறு 17.3.2021ம் தேதிய கடிதத்தின் மூலம் திரு.என்.சுப்பராயலு, வழக்கறிஞர், சென்னை அவர்களிடம் கோரப்பட்டது. 10.4.2021ம் தேதிய சட்ட கருத்து கடிதத்தில் மேற்படி திரு.ஆர்.நரேஷ்குமார், துப்புரவு பணியாளருக்கு தண்டனை வழஙகி பணியில் சேர்த்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்ட கருத்து கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, திரு.ஆர்.நரேஷ்குமார், துப்புரவு பணியாளர் என்பவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிருபணம் ஆனதாலும், அன்னார் மீது காவல் துறையில் அளிக்கப்பட்ட இவ்வலுவலக புகார் மீது ஒசூர் நகர காவல் துறையால் எடுக்கப்படும் இறுதி நடவடிக்கைகளுக்கு உட்படுத்தியும், இந்நேர்வில் கையாடல் செய்யப்பட்ட தொகை முழுவதும் நகராட்சி கணக்கில் வரவாகியுள்ளது என்பதாலும், நிருபணம் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக 1.4.2021 முதல் மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தி வைத்தும், 02.05.2017 முதல் 19.04.2021 வரையிலான தற்காலிக பணிநீக்க காலத்தை ஊதியமில்லாத விடுப்பாக பாவித்தும், அன்னாரை 20.04.2021 முதல் மீண்டும் பணியில் சேர அனுமதித்தும் 20.4.2021ம் தேதிய செயல்முறைகளின் மூலம் உத்தரவிடப்பட்டது.

எனவே 13.4.2021ம் தேதிய சட்ட கருத்துடன் வரப்பெற்ற மனுவில் கோரியுள்ளவாறு, மேற்படி சட்ட கருத்து வழஙகியமைக்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/—யை திரு.என்.சுப்பராயலு, வழக்கறிஞர், சென்னை அவர்களுக்கு வழஙக மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1186/2017/சி1

**பொருள் எண் 8**

இம்மாநகராட்சியிலுள்ள இரண்டு அம்மா உணவகங்களில் பணிபுரியும் சுயஉதவிக் குழு பணியாளர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்ட டிசம்பர் 2020 முதல் ஏப்ரல் 2021 வரை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தா தொகை மற்றும் அதற்கான பங்குத் தொகையை EPF online portal-ல் செலுத்தப்பட்டு விட்டது.

மேற்படி தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தா தொகை மற்றும் அதற்கான பங்குத் தொகையினை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டமைக்கான கட்டணம் மொத்தம் ரூ.4430/-ஐ வழங்குமாறு பில்களின் மூலம் உரிமையாளர், Goal Path HR Solution, Vasanth Nagar, Hosur என்பவர் கோரியுள்ளார்.

எனவே மேற்படி டிசம்பர் 2020 முதல் ஏப்ரல் 2021வரை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தா தொகை மற்றும் அதற்கான பங்குத் தொகையினை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டமைக்கான கட்டணம் ரூ.4430/-ஐ உரிமையாளர், Goal Path HR Solution, Vasanth Nagar, Hosur என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 6261/2016/சி1

**பொருள் எண் 9**

நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது தொடர்பாக இம்மாநகராட்சியின் ஆணையாளரை 3வது பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.No.11622 of 2020-ன் மூலம் திரு.தயாளாள் மாவாஜி பயால் என்பவரால் வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி வழக்கினை இம்மாநகராட்சியின் சார்பாக ஆஜராகி வழக்காட திரு.என்.சுப்பராயலு, உயர்நீதிமன்ற வழக்கறிஞர், சென்னை என்பவரை நியமிக்கப்பட்டு, மேற்படி வழக்கு முடிவிற்கு கொண்டு வரப்பட்டது.

எனவே மேற்படி வழக்கில் இம்மாநகராட்சி சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு.என்.சுப்பராயலு, சென்னை என்பவர் மேற்படி வழக்கிற்கான கட்டணமாக ரூ.15000/- வழங்கக் கோரி தனது 22.04.2021ம் தேதிய கடிதத்தின் வாயிலாக கோரியுள்ளார்.

எனவே மேற்படி வழக்காடல் கட்டணம் ரூ.15000/-த்தை திரு.என்.சுப்பராயலு, சென்னை என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 4438/2020/எப்1

பொருள் எண் 10 (193)

ஒசூர் மாநகராட்சி, ஒசூர் கிராமம் சர்வே எண் 334/2A Pt. வார்டு B, பிளாக் 11, நகரளவை எண்கள் 4/2, 30/4 மற்றும் பிளாக் 28, நகரளவை எண் 5 ஆகியவற்றில் 0.5421 ஏக்கர் (அ) 2194.70 ச.மீ. பரப்பளவு கொண்ட நிலத்தில் திரு.சி.முருகேஷ் மற்றும் 2 நபர்கள் ஆகியோரால் அமைக்கப்படவுள்ள குடியிருப்பு மனைப் பிரிவில் தெருவிளக்கு, பாலங்கள், சாக்கடை வடிகால், குடிநீர் வசதி ஆகியவைகளை மனுதாரர்களால் செய்யப்பட்டும், பொது ஒதுக்கீடுகளான சாலைகள் அமைத்தும், அதனை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ள உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களின் 28.12.2020ம் தேதிய ந.க.எண் 2713/2020/கிமா கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனைப் பிரிவில் சாலைப் பணி, கால்வாய் பணி, குடிநீர் பணி ஆகியவை செய்துள்ளதாகவும், தெருவிளக்கு அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பட்டியல் எண் 1973783 நாள் 22.04.2021ம் தேதியில் உரிய தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும், மாநகராட்சி பொறியாளர் அவர்களின் 23.04.2021ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மனைப் பிரிவிலுள்ள சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளவும், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மனைப் பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 9011/2020/எப்1

**பொருள் எண் 11**

ஒசூர் தொகுதி சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் பழுதடைந்துள்ள தரைகள், சுவர்கள், மேம்பாடு செய்தல், மின் ஒயரிங் பணி, Plug Point, Fan Point, Light Point பணிகள் மேற்கொள்ளுதல், மின் விளக்குகள் பொருத்துதல், பேன் பொருத்துதல், கழிவறை மேம்பாடு செய்தல், தண்ணீர் குழாய்கள் பழுதுபார்த்தல் மற்றும் புதியதாக Ramp அமைத்தல், வாக்குசாவடி எண் போடுதல், தேர்தல் நடைபெறும் இடங்களிலிருந்து 100மீ லைன் பெயிண்டிங் போடுதல் போன்ற பணிகளை செய்து தயார் நிலையில் இருக்க வேண்டுமென்று மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தியுள்ளதின் அடிப்படையில் இவ்விடங்களை பார்வையிட்ட மாநகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் மேற்கண்ட பணிகளை உடனடியாக செய்து முடிக்க அறிவுறுத்தினர். எனவே மேற்படி பணிகளை மேற்கொண்ட வகையில் செலவீனம் ரூ.990000/—னை திரு.L.சுப்பிரமணி ஒப்பந்ததாரர் அவர்களுக்கு மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் வழங்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் எண் 12

ஒசூர் மாநகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை தோராயமாக **3.00** இலட்சமாக உள்ளது. கொரோன வைரசின் இரண்டாம் அலையின் காரணமாக தமிழ்நாட்டில் நாளொன்றுக்கு **30,000**க்கு மேல் நோய் தொற்றாளர்களின் எண்ணிக்கை பதிவாகி வருகிறது. ஒசூர் நகரில் மட்டும் சுமார் **190** நபர்களுக்கு மேல் நோய் தொற்று ஏற்பட்டு பாதிப்படைந்து வருகின்றனர். எனவே, மேலும் நோய்த் தொற்று பரவாமல் தடுக்கவும், ஒசூர் மாநகராட்சியிலுள்ள பொதுமக்களை பாதுகாக்கவும், நகரின் **45** வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இதற்காக தமிழ்நாடு அரசு நிறுவனமான "Tamcol", சென்னை நிறுவனத்தில் பேசியதில் **500**gm பெட்டி (Box) ஒன்றின் விலை ரூ.**369.00** (GST இல்லாமல்) என தெரிவித்தனர். அதனடிப்படையில், இம்மாநகராட்சிக்கு **500**Kg கபசுர குடிநீர் சூரணம் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காகும் செலவினம் ரூ.**3,87,500/–** கீழ்க்கண்டவாறு

**500**gm பெட்டி – **1000** எண்ணிக்கை × **369/1** No. = 3,69,000.00

| | | |
|---|---|---|
| CGST 2.50% | = | 9,225.00 |
| SGST 2.50% | = | 9,225.00 |
| மொத்தம் | = | **3,87,500.00** |

எனவே மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 13**

ஒசூர் மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் மண்டலம் 1-ல், 8 எண்ணிக்கையும், மண்டலம் எண் 2-ல், 4 எண்ணிக்கையும், மண்டலம் எண்-6ல், 3 எண்ணிக்கையும் மொத்தம் 15 எண்ணிக்கை பழுதடைந்துள்ளது. இவைகளை சரி செய்ய ஆகும் செலவினம் ரூ.3,15,000/- (GST, LWF சேர்த்து) ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 14

ஒசூர் தொகுதி சட்டமன்ற தேர்தல் 2021 நடைபெறவுள்ள வாக்குச்சாவடி மையங்களில் இரண்டு இடங்களில் ‘‘மாதிரி வாக்குச்சாவடி‘‘ மையங்கள் அமைக்க வேண்டியுள்ளது. மேலும், வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான சேர், டேபிள், சாமியானா, Water can போன்றவைகளும் அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிகளை மேற்கொண்ட வகையில் செலவீனம் ரூ.683625/—னை திரு.S.சசிகுமார் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் வழங்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் 15**

ஒசூர் மாநகராட்சிக்கு எதிராக K.நாகப்பா தாசரப்பள்ளி தின்னா அவர்கள் பசுமை தீர்ப்பாயத்தில் தொடர்ந்த விண்ணப்பம் எண் 162/2016(SZ)ன் தற்போதைய நிலை குறித்த விவரங்களை பசுமை தீர்ப்பாயத்தில் ஆஜராகி சமர்ப்பிக்கவும் விண்ணப்பம் பின்தொடர உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.N.சுப்பராயலு அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் கோர்ட் ஸ்டாம்ப் போன்ற இதர செலவினங்கள் ஆக மொத்தம் ரூ.15,000/-யினை பொது நிதியில் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 16**

**ஒசூர் மாநகராட்சியில் மொத்தம் 45 வார்டுகள் உள்ளன. தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 3,28,000. மொத்த வரிவிதிப்பு வீடுகள் மற்றும் கடைகளின் எண்ணிக்கை 83,000. இம்மாநகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பையின் அளவு 22 டன். பிளாஸ்டிக் குப்பையின் அளவு 14 டன். இவ்வாறு 11 நுண்ணுயிர் செயலாக்க மையங்களில் பிரித்தெடுக்கப்படும் மக்காத குப்பைகளை சிமெண்ட் தொழிற்சாலை போன்ற பிற இடங்களுக்கு லாரி மூலம் அனுப்ப வேண்டியுள்ளதால், இவைகளை பண்டலாக கட்ட வேண்டியுள்ளது. இதற்கான இயந்திரம் "Hydraulic Bailing Machine" ஒன்று புதியதாக வாங்க வேண்டுமென சுகாதார ஆய்வாளர்கள் இம்மாநகராட்சி ஆணையரிடம் கோரிக்கை வைத்தனர். இதனடிப்படையில் முதற்கட்டமாக ஆனந்த நகர் நுண்ணுயிர் செயலாக்க மையத்திற்கு ஒரு Bailing Machine வாங்க நடவடிக்கை எடுக்க ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறிவுறுத்தினர். அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.4.50 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

அலுவலக குறிப்பு

1. **மாமன்றம் அனுமதிக்கலாம்**
2. **மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் 17**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட ஆனந்த நகர் நுண்ணுயிர் செயலாக்க மையம் அருகில் காலியாக உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அப்பகுதி பொதுமக்கள் ஆக்கிரமிப்பு செய்து கோயில் கட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர். எனவே இவ்ஆக்கிரமிப்பினை தடுக்கும் பொருட்டு உடனடியாக சுற்றுசுவர் கட்ட வேண்டியுள்ளது. இவ்விடத்தினை ஆய்வு செய்த ஆணையாளர் மற்றும் பொறியாளர் உடனடியாக சுற்றுசுவர் கட்டவும், ஆக்கிரமிப்பினை தடுத்து நிறுத்தவும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினர். எனவே மேற்கண்ட இடத்தில் சுற்றுசுவர் கட்டவும் மற்றும் நுண்ணுயிர் செயலாக்க மையத்தில் உள்ள கழிவறையினை மேம்படுத்தவும் ரூ.7.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 18**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வெங்கடேஷ் நகரில் அமைந்துள்ள மயானத்தின் நுழைவாயில் பகுதியில் காலியாக உள்ள இடங்களில் பொதுமக்கள் ஆக்ரமிப்பு செய்தும், மயானத்தினை சுற்றி அசுத்தமும் செய்து வருகின்றனர். எனவே, மயான சுற்றுபுறங்களை பாதுகாக்கவும், மயானத்தினை சுற்றி தூய்மையாக வைத்துக்கொள்ளவும், மயானத்தின் சற்றுச்சுவர் எதிரில் காலியாக உள்ள இடத்திற்கு Chain Link பென்சிங் அமைத்து மரங்கள், பூச்செடிகள், பூங்கா போன்றவைகளை அமைக்க ரூ.9.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 19**

**ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்வரும் இடங்களில் உள்ள 30,000லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் பழுதடைந்து விழுந்து விழும் நிலையில் உள்ளது. இதனால் பொதுமக்கள் பாதிப்படைவதுடன் அருகிலுள்ள வீடுகளும் பாதிக்கப்படும். எனவே, அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்வதற்கு முன்பு இம்மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி 1) பேடரப்பள்ளி (30,000லிட்டர்) 2) பாரதியார் நகர் (30,000லிட்டர்) 3) திம்மசந்திரம் (30,000லிட்டர்) ஆகிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இடித்து அப்புறப்படுத்த ரூ.5.40 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 20**

ஒசூர் மாநகராட்சியில் கீழ்கண்ட பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண். நாள் அனுமதி அளித்துள்ளது. அதன்படி **26.02.2021** தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் : ஒசூர் மாநகராட்சியின் அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் பிரிண்டிங் பொருட்கள் கொள்முதல் செய்தல்

மதிப்பீடு : ரூ. **9.90** இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| **1** | M/s. Spyder Technology | **0.15**% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| **2** | M/s. digi Printer service | **0.24** % சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.15**% சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. Spyder Technology என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்று கொள்ளலாம்.

**பொருள் எண் 21**

ஒசூர் மாநகராட்சியில் கீழ்கண்ட பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண். நாள் அனுமதி அளித்துள்ளது. அதன்படி **26.02.2021** தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் : ஒசூர் மாநகராட்சியில் அனைத்து பிரிவுகளிலும் உள்ள கணினி மற்றும் பிரிண்டர்கள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு : ரூ. **6.50** இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Spyder Technology | **0.15**% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s. digi Printer service | **0.24** % சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.15**% சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. Spyder Technology என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்று கொள்ளலாம்.

**பொருள் எண் 22**

ஒசூர் மாநகராட்சி சீதாராம் நகரில் உள்ள பழைய ஆரம்ப சுகாதார மையம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மாவட்ட ஆட்சியர் ஆய்வின் பொழுது இதனை பழுதுபார்த்து Covid–19 பணிகளுக்கு பயன்படுத்த அறிவுறுத்தியுள்ளார். எனவே, இக்கட்டிடத்தில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவும், கட்டிடத்தின் வெளியே பொதுமக்களின் நலன் கருதி Shed அமைக்கவும் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.5.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 23**

ஓசூர் மாநகராட்சியின் அனைத்து பிரிவுகளின் கணினி மற்றும் பிரிண்டர்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.6.50 இலட்சங்கள் ஆகும். மேற்படி பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| S.No | Description |
|---|---|
| 1 | Annual Maintance Contract for Desktop Computers With Spares Included |
| 2 | Annual Maintance Contract for All In One Dekstop With Spares Included |
| 3 | Annual Maintance Contract for Printer Single Function With Spares Included |
| 4 | Annual Maintance Contract for Printer Multifunction With Spares Included |
| 5 | Annual Maintance Contract for Printer Duplex With Spares Included |
| 6 | Annual Maintance Contract for Dot Matrix Printer With Spares Included |
| 7 | Annual Maintance Contract for Scanner Heavy Duty With Spares Included |
| 8 | Annual Maintance Contract for Xerox Machine With Spares Included |
| 9 | Annual Maintance Contract for 3.5KVA Online UPS With Spares Included |
| 10 | Annual Maintance Contract for 2.5 KVA UPS With Spares Included |
| 11 | Annual Maintance Contract for 1.5 KVA UPS With Spares Included |
| 12 | Annual Maintance Contract for Laptop -HP With Spares Included |
| 13 | Annual Maintance Contract Internet Modem With Spares Included |
| 14 | Annual Maintance Contract for Network Switches With Spares Included |
| 15 | Annual Maintance Contract CCTV 32 Cameras &32CH DVR Unit With Spares Included |
| 16 | Annual Maintance Contract for Amma Unavagam CCTV Camera With Spares Included |
| 17 | Annual Maintance Contract for BIO-Matric Device With Server & Spares Included |
| 18 | Contigencies and other unforseen charges. |

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 24**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 ஜுஜுவாடி பகுதியில் ஏரியின் உட்பகுதியில் உள்ள ஆழ்துளைகிணறு அமைக்கப்பட்டு குடிநீர் எடுப்பதால் குடிநீர் அசுத்தமாக இருப்பதால் பொதுமக்கள் குடிநீரை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இப்பகுதியில் புதியதாக இரண்டு ஆழ்துளைகிணறு அமைத்து தர இப்பகுதி குடியிருப்போர் நலச்சங்கம் மூலம் தெரிவித்துள்ளனர். இப்பகுதிக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி பகிர்மான குழாய் பதித்து பணியை செய்து முடிக்குமாறு அப்பகுதியை நேராய்வு செய்த ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணிகளை மேற்கொள்ள ரூ.15.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1, மாமன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
ஒசூர் மாநகராட்சி

2021ஆம் ஆண்டு மே மாதம் 10ம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் நடவடிக்கைகள்

தலைமை – திரு.ம.செந்தில்முருகன்,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், ஒசூர் மாநகராட்சி

| பொருள் எண் | தீர்மான எண் | கூட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1 | 184 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 185 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 186 | அங்கீகரிக்கப்பட்டது |
| 4 | 187 | அனுமதிக்கப்பட்டது |
| 5 | 188 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | 189 | அனுமதிக்கப்பட்டது |
| 7 | 190 | அனுமதிக்கப்பட்டது |
| 8 | 191 | அனுமதிக்கப்பட்டது |
| 9 | 192 | அனுமதிக்கப்பட்டது |
| 10 | 193 | அனுமதிக்கப்பட்டது |
| 11 | 194 | பதிவு செய்யப்பட்டது |
| 12 | 195 | அனுமதிக்கப்பட்டது |
| 13 | 196 | அனுமதிக்கப்பட்டது |
| 14 | 197 | பதிவு செய்யப்பட்டது |
| 15 | 198 | அனுமதிக்கப்பட்டது |
| 16 | 199 | அனுமதிக்கப்பட்டது |
| 17 | 200 | அனுமதிக்கப்பட்டது |
| 18 | 201 | அனுமதிக்கப்பட்டது |
| 19 | 202 | அனுமதிக்கப்பட்டது |
| 20 | 203 | ஏற்றுக் கொள்ளப்பட்டது |
| 21 | 204 | ஏற்றுக் கொள்ளப்பட்டது |
| 22 | 205 | அனுமதிக்கப்பட்டது |
| 23 | 206 | அனுமதிக்கப்பட்டது |
| 24 | 207 | அனுமதிக்கப்பட்டது |

(ஒம்) ம.செந்தில்முருகன்
தனி அலுவலர்
ஒசூர் மாநகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
ஒசூர் மாநகராட்சி